**செய்தி வெளியீடு எண். 694** **நாள்– 16.08.2010**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

## செய்தி வெளியீடு – 16.08.2010

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் நேர்காணல் மற்றும் கலந்தாய்வில் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 6,503 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் இருபத்தி ஐந்து கலந்தாய்வில் நிரப்பப்பட்டுள்ளன. தற்போது அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கயில் காலியாக உள்ள 783 மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி பணியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நபர்களுக்கு 26–வது கலந்தாய்வு கூட்டம் இம்மாதம் 23, 24, 25 மற்றும் 26.08.2010 ஆகிய நான்கு நாட்களில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை பயிற்சி நிலையம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை – 600 008, என்ற இடத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அன்று மாலையே பணி நியமன ஆணைகள் வழங்கப்படும். நியமன ஆணை பெற்றவர்கள் பதினைந்து தினங்களில் பணியில் சேர வேண்டும்.

வேலை வாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்துள்ள பெயர் பட்டியல் விவரங்கள் www.tnhealth.org எனும் இணைய தளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். பட்டியலில் உள்ளவர்களுக்கு தபால் மூலம் அழைப்புக் கடிதம் அனுப்பப்படுகிறது. அழைப்புப் கடிதம் வரவில்லை என்றால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணைய தளத்தைப் பார்த்து அவர்களை அழைக்கப்பட்டுள்ள நாட்களில் கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம். வேலை வாய்ப்பு அலுவலகம் பரிந்துரை செய்துள்ள பட்டியலில் உள்ளவர்கள் மட்டுமே கலந்தாய்வில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது. மற்றவர்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

***************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,சென்னை–9.**